செ.வெ.எண்: 761 நாள்: 20.11.2020

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம் நடைபெறயுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் தகவல்

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெற்றவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தின் தொலை தூரங்களில் இருந்து வந்து அடையாள அட்டை பெறாதவர்களுக்காக ஒன்றியவாரியாக சிறப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முகாமில் எலும்பு முறிவு மருத்துவர், காது மூக்கு தொண்டை பிரிவு மருத்துவர், மன நல மருத்துவர் மற்றும் கண் மருத்துவர் ஆகிய அரசு மருத்துவர்கள் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளை பரிசோதனை செய்து மருத்துவச்சான்று வழங்க உள்ளார்கள். மேற்படி மருத்துவ அலுவலர் வழங்கும் சான்றிதழின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

**முகாம் நடைபெறவுள்ள இடம்**

| | நாள் | ஒன்றியம் | முகாம் நடைபெறும் இடம் **காலை 10.00 முதல் பிற்பகல் 1.00 மணிவரை** |
|---|---|---|---|
| 1 | 24.11.2020 செவ்வாய்கிழமை | சேதுபவாசத்திரம் | அரசு மேல்நிலைப்பள்ளி பெருமகளூர் |
| 2 | 25.11.2020 புதன்கிழமை | பேராவூரனி | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பேராவூரனி |
| 3 | 28.11.2020 சனிகிழமை | மதுக்கூர் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மதுக்கூர் |

தஞ்சாவூர் மாவட்டத்தில் சேதுபவாசத்திரம், பேராவூரனி மற்றும் மதுக்கூர் ஒன்றியங்களைச்சேர்ந்த இதுநாள் வரை அடையாள அட்டை பெறாத அனைத்து கிராமங்களைச்சேர்ந்த மாற்றுத்திறனளிகள் முகாமில் கலந்துகொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் கலந்துகொள்ளும் மாற்றுத்திறனாளிகள் குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், புகைப்படம் -6 மற்றும் இதற்கு முன் சிகிச்சை பெற்ற ஆவணங்களுடன் வரவேண்டும். இதுநாள்வரை தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைக்கு(UDID)விண்ணப்பிக்காத மாற்றுத்திறனாளிகளும் முகாமில் மேற்கூறிய ஆவனங்களுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை நகலுடன் வந்து விண்ணப்பித்து பயன்பெறலாம். முகாமில் கலந்துகொள்ளும் அனைவரும் கண்டிப்பாக முக கவசம் அணிந்து வரவேண்டும். சமூக இடைவெளி கடைபிடிக்கவண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெறும் முகாமில் சம்பந்தப்பட்ட ஒன்றியங்களைச்சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் உரிய ஆவணங்களுடன் நேரில் வந்து கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.